ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2170/4 - 2020 අප්‍රේල් මස 08 වැනි බදාදා - 2020.04.08

*2170/4 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2017ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

*2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்*

1. இரட்டைப் பிரசாவுரிமையுடையோர் உள்ளடங்கலாக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற எவரேனும் இலங்கையர், இலங்கையை பூர்வீக நாடாக கொண்ட வேறு நாடுகளின் பிரசைகள் மற்றும் நிதியங்கள், கூட்டுநிறுவன அமைப்புக்கள் மற்றும் ஏனைய நலன்விரும்பிகள் உள்ளடங்கலாக இலங்கைக்கு வெளியில் வதிகின்ற எவரேனும் ஆள், இவ்வொழுங்குவிதியின் திகதியிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலத்திற்கு கணக்கு வைத்திருப்பவர் சார்பில் வங்கித்தொழில் முறைமையூடாக வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் உள்முகப் பணவனுப்பல்களில் இருந்து இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருடன் ஏதேனும் பெயர்குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலோ அல்லது இலங்கை ரூபாய்களிலோ தவணை வைப்புக்களாக "சிறப்பு வைப்புக் கணக்கு" என்ற பெயரிலான கணக்கொன்றினை ஆரம்பித்து பேணுவதற்கு இத்தால் அனுமதிக்கப்படுகின்றது.

2. சிறப்பு வைப்புக் கணக்கின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்,

   (i) குறைந்தபட்ச கால அளவு : ஆறு (06) மாதங்கள்

   (ii) செலுத்தத்தக்க வட்டி : தொடர்புடைய வங்கியினால் அதனையொத்த முதிர்ச்சிகளைக் கொண்ட சாதாரண வைப்புக்களுக்கு ஏற்புடைத்தான வைப்பு வட்டி வீதங்களுக்கு மேலதிகமாக, வைப்பின் முதிர்ச்சியில் செலுத்தத்தக்கதாக 6 மாதங்ளை மற்றும் 12 மாதங்களைக் கொண்ட கால அளவுடன் கூடிய சிறப்பு வைப்புக் கணக்குகளுக்காக ஆண்டுக்கு முறையே 1 சதவீத புள்ளி மற்றும் 2 சதவீத புள்ளிகள்.

(iii) நிதியங்களை சொந்த நாட்டுக்கு திருப்பியனுப்புதல் : தவணை வைப்புக்கள் முதிர்ச்சியடையும்போது தங்குதடையின்றி மாற்றப்படக் கூடியவை என்பதுடன் இலங்கைக்கு வெளியில் சொந்த நாட்டிற்கு திருப்பியனுப்பக் கூடியவை.

3. சிறப்பு வைப்புக் கணக்குகள், 2017, நவெம்பர் 17 ஆந் திகதியிடப்பட்ட 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மூலம் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணி மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்கு விதிகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நடைமுறைசார் தேவைப்பாடுகளில் இருந்து விலக்களிக்கப்படும்.

4. விசேட வைப்புக் கணக்குகளை ஆரம்பித்து பேணுவதற்கான பிரமாணம், அதன் அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள் மற்றும் வரவுகள் என்பன இவ்விடயம் சார்பில் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளுக்கு அமைவானதாகவிருத்தல் வேண்டும்.

5. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக, பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களானவை ஐக்கிய அமெரிக்க டொலர்கள், யூரோ, ஸ்ரேலிங் பவுன், அவுஸ்திரேலிய டொலர்கள், சிங்கப்பூர் டொலர்கள், சுவீடன் குரோனர், சுவிஸ் பிராங், கனேடியன் டொலர்கள், கொங்கொங் டொலர்கள், யப்பானிய யென், டென்மார்க் குரோனர், நோர்வே குரோனர், சீனா ரென்மின்பி மற்றும் நியுசிலாந்து டொலர்கள் என்பனவாகும்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2020, ஏப்பிறல் 08.